முருகப்பெருமான் துணை

# மகான் குலச்சிறை நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

30.04.2021, வெள்ளிக்கிழமை

1. அருட்குருவே ஆறுமுக ஞானியே
அவதாரமாக வந்த தவசியே
அருள் உலகம் அமைய வேண்டி
ஆறுமுகனார் வழிபாட்டை பெருக்கி
2. பெருக்கியே ஞான வழி காட்டும்
பேராசான் அரங்கன் ஞானமதை
கருத்தாக உலகமக்கள் ஏற்றிட
கலியுகம் மாறுமெனக் கூறி
3. கூறியே யோக பிரசன்ன ஆசி
குறைவிலா பிலவ தகர் திங்கள்
கருதியே மூவையீர்திகதி புகர்வாரம்
(பிலவ வருடம் சித்திரை மாதம் 17ம் நாள், 30.04.2021 வெள்ளிக்கிழமை)
கண்டுரைப்பேன் குலச்சிறை நாயனார் யானும்
4. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான சன்மார்க்கம் தனை
ஞானமாக அருளும் அரங்கன்
நம்பிக்கை தரும் வழிகள் தன்னை
5. தன்னையே உலகோர் ஏற்று
தரணியில் தொடர்ந்து வர
அண்ணலே என அரங்கனின்
அன்னதான சேவை ஏற்றும்
6. ஏற்றுமே அன்ன தானமதை
எல்லா திக்கிலும் செய்துமே
ஆற்றல்பட மக்கள் பசிபிணி
அனைத்து திக்கிலும் போக்கி
7. போக்கியே தருமசிந்தை வளர
புண்ணிய வழிகளை காட்டி
தேக்கமின்றி அவதார ஞானி
தேசிகர் ஆசிதனை அருளிவர
8. வருகின்ற பிரணவக்குடிலை நோக்கி
வணங்கி மக்கள் வந்துமே
தருமத்தில் பங்களிப்பு தந்து
தவராசன் சீடர்களாகி இனிதே
9. இனிதே கலித்துன்பம் அகல
இணைந்து தவமுறைகள் செய்து
கனிவேலன் வழிபாட்டுடன்
கட்டாய பூஜைகள் செய்து

10. செய்து சுத்த சைவ நெறியே
சிவநெறி சித்தி அருளும் நெறியென
மெய் ஞானத்தெளிவு கூடியே
மேலவர்கள் அருள் ஆசிபட

11. ஆசிபட கடைத்தேற்றமும்
அரங்கன் துணை கூடிட
வாசி வெல்லும் நிலை கண்டு
வையகத்தார் ஞானிகளாவர்
யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–